தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதளமுகவரி: www/tnlbo.tn.gov.in

**முன்னிலை: மகேசன் காசிராஜன் இ.ஆ.ப (ஓ)**

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்.41/மா/2024**

**நாள்: 24.09.2024**

திரு.E.மணிகண்டன், சென்னை–28 ---- மனுதாரர்

VS

மண்டல அலுவலர்,
மண்டலம் 13,
பெருநகர சென்னை மாநகராட்சி ---- எதிர் மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி ஆர்.ஏ.புரம், கற்பகம் அவின்யூ, 3வது குறுக்கு தெரு,கதவு எண்.95/18A என்ற முகவரியில் வசிக்கும் திரு.E.மணிகண்டன் என்பவரின் புகார் மனு நாள் 01.04.2024 இம்முறைமன்ற நடுவத்தில் 02.04.2024 அன்று பெறப்பட்டு, 41/மா/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

பெருநகர சென்னை மாநகராட்சி, ஆர்.ஏ.புரம், கற்பகம் அவின்யூ, 3வது குறுக்கு தெரு, கதவு எண்.95/18A என்ற முகவரியில் வசிக்கும் திரு.E.மணிகண்டன் அவர்களின் 01.04.2024 நாளிட்ட மனுவில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கோப்பு, சென்னை ஆர்.ஏ.புரத்தை சேர்ந்த திரு.E.மணிகண்டன் என்பவர், சென்னை, அடையார் காந்தி நகர், 4வது மெயின்ரோடு கதவு எண்.7–இல் M/s.Sorgam Hotel (Previously M/s.Crimson Foods) என்ற பெயரில் இயங்கி வரும் ஹோட்டல் முன்பு தரை தளம் சுமார் 2000 சதுர அடி உள்ள கட்டிடமாக இருந்தது எனவும், தற்போது தரை தளத்தில் 5,000 சதுர அடிக்கு "Butterheads" என்ற பெயரில் ஹோட்டல் 4 தளங்கள் உள்ளதாகவும், அனுமதியின்றி லிப்ட் போட்டிருப்பதாகவும், Fire Licence வாங்கவில்லை என்றும், விசாரணையில் இக்கட்டிடம் 50 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்டுள்ளது என்றும், இந்த பழைய கட்டிடத்திற்கு சென்னை மாநகராட்சியிடமிருந்து எந்தவிதமான கட்டிட அனுமதியோ அல்லது CMDAயிலிலிருந்து முறையாக அனுமதியோ வாங்கவில்லை, அவர்கள் விருப்பத்திற்கேற்ப சுமார் 20,000 ச.அடிக்கு மேல் 4 மாடி வரை சட்டத்திற்கு புறம்பாக கட்டியுள்ளதாகவும், எந்தவித கட்டிட முன்அனுமதியும் பெறாமலேயே இக்கட்டிடத்திற்கு முன் பகுதியில் அதனை ஒட்டி "Amenities'' என்ற ஐஸ்கிரீம் கடை கட்டி வாடகைக்கு விட்டுள்ளதாகவும், சட்டத்திற்கு புறம்பாக கெட்டு போன உணவு பொருட்களை தயார் செய்து விற்பனை செய்தது தொடர்பாக M/s.Crimson Foods ஹோட்டல் மீது ஒரு கிரிமினல் வழக்கு சைதாப்பேட்டை நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதாகவும் அதற்காக இந்த ஹோட்டலுக்கு M/s.Sorgam Hotel என்று பெயர் மாற்றி இருப்பதாகவும், ஆனால் சொத்துவரி மதிப்பீட்டில் owner occupation என்று குறிப்பிட்டுள்ளார்கள் என்றும், இது குறித்த புகார் மீது பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்று தெரிவித்து,

M/s.Sorgam Hotel (Previously M/s.Crimson Foods) என்ற பெயரில் ஹோட்டல் நடத்தி வருபவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுத்து அந்த ஹோட்டலுக்கு வழங்கி வரும் உரிமத்தை ரத்து செய்து நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

2) இம்மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 13ன் மண்டல அலுவலரை இம்முறைமன்ற 24.07.2024 நாளிட்ட அறிக்கையில் கோரப்பட்டது.

3) பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 13–ன் செயற்பொறியாளர் 21.08.2024 நாளிட்ட அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

"மனுதாரரின் கோரிக்கை குறித்து கள ஆய்வு மேற்கொண்டு கட்டிடம் மற்றும் மனை குறித்த ஆவணங்கள் கோரியதில் இக்கட்டிடம் 50 வருடங்களுக்கு முன்பாக 1975ஆம் ஆண்டிற்கு முன் 1954–66இல் ராஜ்சபா உறுப்பினராக இருந்த திரு.மேட்ரி சத்ய நாராயணா (சுதந்திர போராட்ட தியாகி) அவர்களால் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இக்கட்டிடம் தரை தளம் மற்றும் நான்கு தளங்களுடன் கட்டமைக்கப்பட்டிருப்பதால் இக்கட்டிடம் சிறப்பு கட்டிடம் (Special Building) அல்லது பல அடுக்கு கட்டிடம் (Multi Storey Building) வரையறையில் வருவதால் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தால் மட்டுமே வரைபட அனுமதி வழங்கப்பட இயலும் என்றும் இக்கட்டிடம் 1975ற்கு முன் அமைக்கப்பட்டுள்ளதால் கட்டிட வரைபட அனுமதி வழங்கப்பட்ட விவரங்கள் பெறப்படவில்லை எனினும் மனுதாரர் கோரிய வணிகரீதியான முறையற்ற உரிமம் சம்மந்தமாக உதவி வருவாய் அலுவலர் ஆய்வு செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும், சுகாதார சீர்கேடு சம்மந்தமான புகார் மீது நடவடிக்கை மேற்கொள்ள மண்டல நல அலுவலர் அவர்களுக்கும் கடிதம் வாயிலாக கேட்டுக்கொள்ளப்பட்டனர் என்றும், மேலும் கட்டிட உரிமையாளர் திரு.நிகில் மொட்டுரி அவர்கள் 12.08.2024 நாளன்று வழங்கிய கடிதத்தில் இக்கட்டிடம் 1940 முதல் 1970ற்குள் கட்டமைக்கப்பட்ட கட்டிடம் எனவும் இக்கட்டிடம் மீதான சொத்துவரி 1980 முதல் கட்டப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார். எனவே, இக்கட்டிடம் பழமையான கட்டிடமாக இருப்பதாலும், 1975ற்கு முன் கட்டிடம் அமைக்கப்பட்டிருப்பதாலும் கட்டிட விதிமீறல் புகார் மீதான நடவடிக்கை நேரடியாக தொடர இயலாது எனவும், சுகாதார சீர்கேடு மற்றும் தொழில் உரிமம் சம்பந்தமான புகார் மீதான மேல் நடவடிக்கை மேற்கொள்ள உதவி சுகாதார அலுவலர் மற்றும் உதவி வருவாய் அலுவலர் அவர்கள் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் என தெரிவித்துள்ளார்"

4) மனுதாரர் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 13ன் செயற்பொறியாளர் ஆகியோர், புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள கட்டிடம் 50 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது என்று தெரிவித்துள்ளார்கள்.

5) மேற்கண்ட நிகழ்வு தொடர்பாக தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற சட்டம் 2014 பிரிவு 10 (3)இல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"10 (3) : The Ombudsman shall not enquire in to matter relating to:-

a) xxx

b) xxx

c) Any Complaint filed after the expiry of five years from the date on which the occurrence is said to have taken place''

5) மனுதாரர் தன்னுடைய **01.04.2024** நாளிட்ட புகார் மனுவில் தெரிவித்துள்ள அனுமதியின்றி கட்டப்பட்டிருக்கும் கட்டிடம் மேற்கண்ட சட்டபிரிவின் வரம்பிற்குள் உட்பட்டு உள்ளதால், இம்முறைமன்றத்தால் மனுதாரரின் **01.04.2024** நாளிட்ட புகார் மனு மீது விசாரணை மேற்கொள்ள வழிவகை இல்லை என்று இம்முறைமன்றம் முடிவு செய்து அவ்வாறே இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

6) **2024** ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் **24–**ஆம் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.E.மணிகண்டன்,
கதவு எண்.95/18A, 3வது குறுக்கு தெரு,
கற்பகம் அவின்யூ, ஆர்.ஏ.புரம்,
சென்னை–600 028.

2) மண்டல அலுவலர்,
மண்டலம்13,
பெருநகர சென்னை மாநகராட்சி,
டாக்டர் முத்துலெட்சுமி சாலை / L.B.Road,
அடையாறு, சென்னை–600 020.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

4) இணை இயக்குநர்,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

<u>நகல்</u> :
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

1/10/24

சட்ட ஆலோசகர்/செயலாளர் (FAC).